Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)

Memenuhi segala keperluan bekalan air anda

*Meeting all your water supply needs*

**13.5.2023**

**ஊடக வெளியீடு**
**மேதகு சாவ் கொன் இயோவ்**
**பினாங்கு மாநில முதலமைச்சர்**

**அதிகமான நீர் தேவை: PBAPP 2030 வரை பினாங்கிற்கான TIME வாங்குவதற்கு ரிம1 பில்லியனுக்கும் அதிகமாக முதலீடுச் செய்ய திட்டமிட்டுள்ளது.**

**• நீர் தற்செயல் திட்டத்தின் 2030 (WCP 2030) கீழ், சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து(WTP) பினாங்கு தீவு மற்றும் மற்றொரு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் அதிகமான சுத்திகரிக்கப்பட்ட நீரை செலுத்துவதற்காக 2 புதிய குழாய் பொருத்தும் திட்டங்களும் உள்ளடங்கும்.**

பினாங்கு, சனி, 13.5.2023: பினாங்கு நீர் விநியோக வாரியம்(**PBAPP**) அடுத்த 5 ஆண்டுகளில் முக்கியமான நீர் விநியோகத் திட்டங்களைச் செயல்படுத்த சுமார் ரிம1.185 பில்லியன் முதலீடுச் செய்யத் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டங்களில் PBAPP இன் நீர் தற்செயல் திட்டத்தின் (WCP 2030) 5 முக்கிய அடங்கும்:

| திட்டங்கள் | | நிறைவு இலக்கு | அதிகபட்ச 'yield' (ஒரு நாளைக்கு மில்லியன் லிட்டர் - MLD) | திட்டமிடப்பட்ட முதலீடு (ரிம மில்லியன்) |
|---|---|---|---|---|
| 1 | புதிய புக்கிட் பஞ்சோர் நீர் சுத்திகரிப்பு ஆலை (WTP) | **2023** | **10** | **20** |
| 2 | தொகுப்பு 12A, சுங்கை டுவா WTP (கூடுதல் நீர் சுத்திகரிப்பு தொகுப்பு) | **2023** | **114** | **31** |
| 3 | மெங்குவாங் அணை | **2025** | **114** | **120** |

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

| | | | | |
|---|---|---|---|---|
| | **WTP** | | | |
| **4** | **சுங்கை கெரியன் WTP, கட்டம் 1** | **2027** | **114** | **171** |
| **5** | **சுங்கை பிறை நீர் விநியோக திட்டம் (மூல நீரை முன்கூட்டியே சுத்திகரிப்பது உட்பட)** | **2028** | **136** | **500** |
| | | **மொத்தம்** | **488** | **842** |

**இந்த 5 அசல் கூறுகள், பினாங்கில் PBAPP நீர் சுத்திகரிப்புத் திறனை மேம்படுத்துவதோடு அதிகரிக்க உதவும். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் பினாங்கு பெருநிலத்தில் உள்ள "3 புதிய துணை மூல நீர் ஆதாரங்கள்" மூலம் நீரைப் பெற அனுமதிக்கும். இதில் விரிவாக்கப்பட்ட மெங்குவாங் அணை(EMD), தென் செபராங் பிறையில் உள்ள சுங்கை கெரியன்(SPS) மற்றும் சுங்கை பிறை அடங்கும்.**
**2023,மே நிலவரப்படி, WCP 2030 திட்டத்தின் கீழ் 2 கூடுதல் புதிய கூறுகளைச் செயல்படுத்த PBAPP திட்டமிட்டுள்ளது:**

| **திட்டங்கள்** | | **நிறைவு இலக்கு** | **அதிகபட்ச சுத்திகரிக்கப்பட்ட நீர் உற்பத்தி(MLD)** | **திட்டமிடப்பட்ட முதலீடு (ரிம மில்லியன்)** |
|---|---|---|---|---|
| **6** | **செபராங் பிறை, சுங்கை டுவா WTP இருந்து பட்டர்வொர்த் வரை 13.0கிமீ 1800மி.மீ நீர் விநியோகக் குழாய்களை அமைத்தல்.** | **2024** | **315** | **128** |
| **7** | **பினாங்கு தீவில் உள்ள PBAPP புக்கிட் டும்பார் நீர்த்தேக்கம் மற்றும் பம்பிங் ஸ்டேஷன் வளாகத்திற்கு 3.9கி.மீ 1800மி.மீ நீர் விநியோகக் குழாய்களை** | **2024** | **315** | **44** |

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

| | | | | |
|---|---|---|---|---|
| | **மெக்கலம் பகுதியிலிருந்து அமைத்தல்.** | | | |

**இந்த 2 புதிய WCP 2030 திட்டம் செபராங் பிறையில் உள்ள சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து பினாங்கு தீவுக்கு அதிகமான சுத்திகரிக்கப்பட்ட நீரை விநியோகிக்க உதவும்.**
**பெருநிலத்தில், புதிய சுங்கை டுவா நீர் சுத்திகரிப்பு ஆலை முதல் பட்டர்வொர்த் பைப்லைன் வரை நீர்மூழ்கிக் குழாய்களின் நுழைவாயில்களுடன் இணைக்கப்படும். தீவில், மெக்கல்லம் பகுதியிலிருந்து புக்கிட் டும்பார் வரையிலான குழாய் நீர்மூழ்கிக் குழாய்களின் நிலையங்களுடன் இணைக்கப்படும்.**

**<u>பெரும்பான்மை WCP 2030 திட்டம் செபராங் பிறையில் செயல்படுவதால் பெருநில நீர் தேவையைப் பூர்த்தி செய்ய பயன்படுத்தப்படுகிறது. அதேவேளையில், தீவுப் பகுதியில் எதிர்கால வறண்ட பருவநிலையால் ஏற்படும் நீர் பற்றாக்குறை அபாயத்தைக் குறைக்க பினாங்கு தீவுக்கும் அதிக சுத்திகரிக்கப்பட்ட நீரை வழங்க வேண்டும்.</u>**

| திட்டங்கள் | | நிறைவு இலக்கு | அதிகபட்ச 'yield' (ஒரு நாளைக்கு மில்லியன் லிட்டர் - MLD) | திட்டமிடப்பட்ட முதலீடு (ரிம மில்லியன்) |
|---|---|---|---|---|
| **8** | **சுங்கை டுவா WTP** | **2028** | **114** | **171** |

**கூடுதலாக, PBAPP சுங்கை மூடாவில் கூடுதல் புதிய WTP -ஐ நிர்மாணித்து நீர் சுத்திகரிப்பு உற்பத்தியை 114 MLD ஆக அதிகரிக்க திட்டமிட்டுள்ளது.**

**சுருக்கமாக: இந்த 8 WCP 2030 திட்டங்கள் பினாங்கில் 2023 முதல் 2028 வரை 5 ஆண்டுக் கால தவணையில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன.**

**இந்த 8 திட்டங்களுக்கான மொத்த திட்டமிடப்பட்ட முதலீடு ரிம1.185 பில்லியன் ஆகும்.**

**2030 ஆம் ஆண்டு வரை பினாங்கு மாநிலம் முழுவதும் நீர் விநியோக நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான PBAPP மற்றும் பினாங்கு மாநில அரசாங்கத்தின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை இந்த முதலீட்டு மூலம் பிரதிபலிக்கிறது.**

PBA

Perbadanan Bekalan Air
Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)

Memenuhi segala keperluan bekalan air anda

*Meeting all your water supply needs*

**மாநில அரசாங்கத்தின் பினாங்கு2030 தொலைநோக்குப் பார்வையை அடைய எங்களுக்கு அதிகமான நீர் விநியோகம் தேவைப்படுகிறது. சுங்கை பேராக் மூல நீர் பரிமாற்றத் திட்டம் (SPRWTS) செயல்படுத்தப்படுவதற்கு முன்னதாக, நீர் விநியோக நெருக்கடியின் அபாயங்களை நாம் குறைக்க வேண்டும்.**

**WCP 2030 திட்டங்கள் 2030க்குள் பினாங்கில் 1,500MLD என்ற திட்டமிடப்பட்ட அதிகபட்ச நீர் தேவையைப் பூர்த்திச் செய்ய முடியும்**

**நன்றி.**

---

**எழுத்தாக்கம்** :**Syarifah Nasywa bt Syed Feisal Barakbah**
**கார்ப்பரேட் தகவல் பிரிவு**
**மின்னஞ்சல்** :**syarifah@pba.com.my**